# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,989 — 1933 ம் ௵ ஆனி௴ 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

**1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரையைப் பற்றிய சட்டம்.**

**1933 ம் ஆண்டு சந்தான நாயகியின், ஆடி திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரிசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தினாற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம் பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.**

டீ. பீ. ஜயதிலக,
சயகாரிய மந்திரி.

சயகாரிய மந்திரி கந்தோர்.
கொழும்பு, 1933 ம் ௵ ஜூன்௴ 20 ந் திகதி.

மேற்குறித்த ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் அடங்கிய விசாலத்தைக் கருதும்.

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினால் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலஞ்சலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய, வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும், தண்ணீர்ப்பதார்த்தமான அல்லது கட்டிப்பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (a) அடிக்கப்படும்படி அங்கே கொண்டுவரப்பட்டவைகளும் உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளைப்படி அவ்விடப்பரப்புக்குள் வைத்துக்கொள்ள இடங் கொடுக்கப்பட்டவைகளுமான ஆடு மாடுகளைத் தவிர வேறு ஆடு மாடுகளை வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவரும் வைத்திருக்கப்படாது.

(b) உதவி அரசாட்சி ஏசன்றரால் ஒரு மாட்டுக்காலையாக விசேஷமாய் நியமிக்கப்பட்ட அல்லது அப்படிப் பாவிக்கலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்ட ஓர் இடத்திற் தவிர மற்றப்படிக்கு வாடியின் இடப்பரப்பின் சமீபத்தில் ஆடு மாடுகளை வைத்திருக்கப்படாது.

(c) அவ்வாடுமாடுகளைத் தன் பொறுப்பில் வைத்திருப்பவன் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிசமீபத்திலுள்ள இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடு மாடுகள் நிற்குமிடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான் விழாமலும் தூசி படியாமலும் இருக்கும்படி (a) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும் அல்லது (b) கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (c) வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப்பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடுவருவிக்கத்தக்க ஆட்களுக்கும், தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளைநோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல யாத்திரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப் போகும்படி செய்தும், அவர்கள் அங்கிருந்து எப் பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (a) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்துவியாதியுள்ள ஒவ்வொருவனும் அல்லது (b) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்குத்தருக் கல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10 வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தையல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாக வைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தையல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பாண்போறணை, சோடாமோள் அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ் லைசென்ஸ் செல்வின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக்களின் எல்லைக்குட் செல்லக் கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச் சீட்டு அல்லது லைசென்ஸ் பெறாமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்கு மிடங்களில் ஆடுமாடு அடிப்போர் அவ்விடத்தைத் துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

தலைவில்லுவாடி இடப்பரப்பின் எல்லைகள்.

வடக்கு : தலைவில்லு ஓடை ;

தெற்கு : ஏத்தாலை தலைவில்லும், தேலிக்குடா தலைவில்லும் அடிப்பாதைகள் எறும்புக்கூடலில் வந்து சேருஞ் சந்தியிலிருந்து நேர்மேற்குப் புறமாகக் கடலுக்குப்போகும் அடிப்பாதை ;

கிழக்கு : பண்டாரம் சருக்குவச்சாம் பெரியதோட்டம் வழிகள் ;

மேற்கு : கடல்.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய சட்டம்.

நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 5 ம், 6 ம் பிரிவுகளின்படியும், 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சனாதிகார ஆட்சிச் சட்டத்தின் 245 ம் பிரிவின்படியும் கோட்டே பட்டினபரிபாலன மண்டலசபையாரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

டீ. எல். டீ. சேரம்,
அக்கிராசனர்.

பட்டண பரிபாலனச் சங்கக் கந்தோர்.
கோட்டை, 1933 ம் வரு (ஜூன்) ஆனிமீ 10 ந் திகதி.

உபவிதிகள்.

கோட்டை பட்டின மண்டலசபையின், பரிபாலன எல்லைக்குள் நிற்கும், ஒவ்வொரு நாய்களின் பொருட்டும், அந்த நாயை வைத்திருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர் பதிவுப்பணமாக, ஒவ்வொரு ஆண் நாய்க்கும், அல்லது பெண் நாய்க்கும் ரூபா 1·50 வருஷ வீதங் கட்டுதல் வேண்டும். இந்த உபவிதியின் நோக்கத்திற்காக, ஒரு வருஷம் என்பது ஏப்பிறில்மீ 1 ந் திகதி தொடக்கம் அடுத்த வருஷம் மார்ச்சுமீ 31 ந் திகதி வரையிலும் உள்ள காலம் எனக் கணக்கிடப்படும்.

2. குறித்த பட்டின மண்டலசபையின் பரிபாலன எல்லைக்குள் நாய் நிற்கும் வீட்டின் அதிகாரியாயுள்ள ஒவ்வொருவரும், அந்தந்த வருஷத்தில் ஜனவரிமீ 31 ந் திகதிக்கு முந்தியே மேற்படி சபையின் அக்கிராசனரால், நியமிக்கப்பட்டுள்ள வரியறவிடுபவரிடம் (Tax Collector) தம்மிடத்திலுள்ள நாயைக் குறித்த விபரங்கள் கீழே காட்டப்படும் "A" என்னும் அடையாளமிடப்பட்ட பத்திரத்திலே நிரப்பிக் கொடுத்தல் வேண்டும்.

3. (1) கீழே காட்டப்படும் "B" என்னும் அடையாளமிடப்பட்ட சேட்டிவிக்கேற் பத்திரமொன்று பதிவுப்பணம் பெற்றவுடனே வரி அறவிடும் உத்தியோகஸ்தராலேனும் மேற்படி சபையின் காரியதரிசியாலேனும் கொடுக்கப்படும்.

4. (a) தனது அபிப்பிராயப்படி ஒரு நாய் மிகவும் நோய்ப்பட்டதாயும் அதைப் பிடித்திருக்கும் நோய் மறு நாய்களுக்குத தொத்தக்கூடியதாயும் இருக்குமாகில் அல்லது ;

(b) வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டு அல்லது ஊறடைந்திருப்பதினால் அது உயிரோடு இருப்பது நன்றன்று என்பதாகக் காணப்படுமாகில் வரி அறவிடும் உத்தியோகஸ்தரேனும், காரியதரிசியேனும் பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரங் கொடுக்க மறுக்கலாம்.

(2) அல்லது அவர்களின் எவராவது நாயின் நிலைக்குத்தக்க நிபந்தனைகளோடு சேட்டிபிக்கற் பத்திரம் கொடுக்கலாம். இங்ஙனம் கொடுக்கவில்லையென்றேனும் நிபந்தனைகள் விதித்தாரென்றேனும், எவராவது திருப்தியீனப்பட்டால் அவர் மேற்படி சபையின் அக்கிராசனரிடம் அப்பீல் முறையீடு செய்துகொள்ளலாம். அவ்வக்கிராசனர் அதை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது அழித்துவிடலாம்.

5. ஒவ்வொரு பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரத்திலும் பின்வரும் நிபந்தனைகள் அச்சிடப்பட்டிருக்கும், அவையாவன :—

(a) குறித்த நாய் மிகவும் நோய் பிடித்திருப்பதால் அல்லது அங்கவீனப்பட்டிருப்பதால் அது உயிரோடிருப்பது நல்லதல்லவென்று அக்கிராசனர் கண்டால் ;

(b) சொந்தக்காரன் அந்த நாயைக் கொடுமையாக நடத்துகிறதாக அல்லது கவனியாது விடுகிறதாக அக்கிராசனர் கண்டால் ;

(c) குறித்த நாய் தொற்றுவியாதியினால் பிடிக்கப்பட்டிருக்கிறபோது, சொந்தக்காரன் அதை மற்றும் நாய்களோடு ஊடாடித் திரியாவிட்டால் ; மேற்படி கோட்டைப் பட்டின மண்டலசபையில் அக்கிராசனரால் இச் சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்படுவதற்கு இடமானதாகும்.

6. (a) சேட்டிவிக்கற் பத்திரம் கொடாது விடப்பட்ட அல்லது, (b) அப்பத்திரத்தில் எழுதியுள்ள நிபந்தனையொன்று நிறைவேற்றப்படாததினால் சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்பட்ட நாயை வைத்திருப்பவர் அறிவித்தலில் குறிக்கப்பட்ட நேரத்தில் அந்த நாயைக் கொண்டுவந்து சங்கக் கந்தோரில் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தரிடம் ஒப்பித்தல்வேண்டும். அக்கிராசனர் அந்த நாய்களின் விஷயத்தில் என்ன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ அவ்வண்ணமே செய்தல் வேண்டும்.

7. நாய்களைப் பதிவுசெய்தலைப்பற்றிய 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின்படி கோட்டை சுகாதார சங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட 1902 ம் வரு நவம்பர்மீ 22 ந் தேதியைக்கொண்ட (1902 ம் வரு நவம்பர்மீ 28 ந் தேதிக் "கசெற்" பத்திரிகையிற் காண்க) உபவிதிகள் நிவாரணமாக்கப்படுகின்றன.

போர்ம் "A".

நாய்களைக்குறித்த உபவிதிகளின்படி எழுதிக்கொடுக்கவேண்டிய விபரப் பத்திரம் :——.

வீட்டிலக்கம் :——.

தெரு :——

வீட்டுக்காரனுடைய பெயர் :——.

| வீட்டிலுள்ள நாய்களின் தொகை | விபரம் | | | | | | சொந்தக்காரன் பெயர் | பணம் கட்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | ஏழுத்தின் அளவு | ஏதும் விசேஷ அடையாளம் | குறிப்பு | | |
| | | | | | | | | மார்ச்சுமீ 31ந் திகதி யன்று அல்லது அதற்கு முன் |

வீட்டுக்காரனுடைய கையொப்பம்.

அறிவித்தல் ஒப்புவித்த தேதி :——
கோட்டை, 193 —— ம் வரு ———— மீ —— ந் தேதி.

மேற்சொல்லிய வீட்டுக்காரன் மேலேயுள்ள போர்ம் பத்திரத்தை ஒரு கிழமைக்குள் நிறப்பி அனுப்பும்படி கேட்கப்படுகிறார். அப்படிச் செய்யத் தவறும் எவரும் ரூபாய் 20 தெண்டம் இறுப்பதற்குப் பாத்திரர் ஆவர்.

அக்கிராசனரின் கட்டளைப்படி,

——————

காரியதரிசி.

பட்டினபரிபாலன சங்கக் கந்தோர்,
கோட்டை, 193 —— ம் வரு ———— மீ —— ந் தேதி.

போர்ம் "B".

நாய்களைப் பதிவு செய்ததைப்பற்றிய சேட்டிவிக்கேற் பத்திரம்.

பதியப்பட்ட இலக்கம் :———.

தெரு :———.

——— இலக்க வீட்டிலிருக்கும் ——— என்பவர் கீழே விபரிக்கப்பட்டிருக்கும் மாதிரியான ஒரு ஆண்/பெண் நாயை இன்று இந்தக் கந்தோரிற் பதிவுசெய்திருக்கிருர் என்றும் அதற்காக ரூபா———பதிவுப் பணமாய்க் காட்டப்பட்டிருக்கிறதென்றும் இதனுல் உறுதிப்படுத்தப்படுகின்றது.

நாயின் விபரம்.

சாதி :———.

ஆணே பெண்ணே :———.

நிறம் :———.

கழுத்தின் அளவு :———.

ஏதும் விசேஷ அடையாளம் :———.

இந்த சேட்டிவிக்கேற் பத்திரம் 19———ம் ஆண்டு மார்ச்சுமீ 31 ந் தேதி வரைக்கும் பெலப்புடையதாயிருக்கும்.

———
காரியதரிசி.

பட்டின பரிபாலன சங்கக் கந்தோர்,
கோட்டை, 193  ம் ஆண்டு பங்குனிமீ  ந் தேதி.

---

## காணி விற்பனவு.

**Jaffna No. 52**—1933 ம் ஆண்டு ஆவணிமீ 9 ந் திகதி, 10 மணிக்கு யாட்பாணக் கச்சேரியில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவற்ணமேந்து ஏசண்டவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும்.

22 காணித்துண்டுகள், வட மாகாணத்து, தீவுப்பற்று, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி, கரைச்சிப் பகுதிகளிலிருக்கின்றன.

### தீவுப்பற்று.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக் காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **பிளான் இலக்கம் 7,136. குறிச்சி—புங்குடுதீவு மேற்கு.** | | | | | |
| 5 | நன் திகுண்டுக்கு தேற்குவெளி | — .. | எ. சுப்பிரமணியம் (முன் கொள்வனகாரன்) | தரவை .. | 2 | 3 | 5 | 20* |
| | | | **பிளான் இலக்கம் 7,785. குறிச்சி—புங்குடுதீவு மேற்கு.** | | | | | |
| 20 | வெளியிற்புலம் .. | — .. | ஆர். சுந்தரம்பிள்ளை, (முன்கொள்வனகாரன்) | தரவை .. | 2 | 0 | 24 | 20* |
| 21 | சோலகன்புலத்திற்குக் கிழக்கு | — .. | எம். சோமசுந்தரமும் வேறு ஆட்களும், (முன் கொள்வன்காரர்) | தரவை .. | 2 | 3 | 34 | 20* |
| 38 | கடற்கரைபுலம் .. | — .. | அன்னபூரணி, என். முத்துக்குமாருவின் கைம்பெண்ணும் மறுபேரும், (முன் கொள்வனகாரர்) | தரவை .. | 1 | 3 | 9 | 20* |
| | | | **பிளான் இலக்கம் 8,152. குறிச்சி—புங்குடுதீவு கிழக்கு.** | | | | | |
| 2 | எனுபிற்றியவயல் .. | — .. | க. முத்துவேலு (முன் கொள்வனகாரன்) | வயல் .. | 1 | 3 | 36 | 24* |

### பச்சிலைப்பள்ளி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக் காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | ரூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **பிளான் இலக்கம் 8,393. குறிச்சி—உடுத்துறை.** | | | | | |
| 1 | நாவற்காடு .. | கணபதியார் வல்லிபுரம் | — .. | தரவை, இதற்குள் ஓர் கொட்டிலும், ஓர் புளியும், பனைகளும் உண்டு | 1 | 0 | 3 | 30 |
| 2 | ஷ .. | — .. | — .. | தரவை, ரோட்டுக்கு சேமிக்கப்படவேண்டிய நிலம் | 0 | 0 | 30 | —† |
| | | | **பிளான் இலக்கம் 8,410. குறிச்சி—முள்ளியன்.** | | | | | |
| 1 | கடற்கரைமணல் .. | — .. | முடிக்குரிய, ஜீ. சீமோனுல் கூட்டிப்பிடித்த நிலம் | தென்னந்தோட்டம், 5 வயதுள்ள 4 தென்னம்பிள்ளைகள் | 0 | 0 | 6 | 35 |
| 2 | ஷ .. | சந்தியாபிள்ளை மரியாம்பிள்ளை | முடிக்குரிய, கேள்விக்காரனுல் கூட்டிப்பிடித்த நிலம் | 12 வயதுள்ள தென்னைகளும், 4 செத்தை வீடுகளும் | 0 | 0 | 37 | 100† |
| 3 | ஷ .. | — .. | முடிக்குரிய நிலம் | கடற்கரைக்காக சேமிக்கப்படவேண்டிய நிலம் | 0 | 0 | 13 | —† |
| 4 | ஷ .. | — .. | ஷ .. | ஒழுங்கைக்காக சேமிக்கப்படவேண்டிய நிலம் | 0 | 0 | 14 | —† |
| | | | **பிளான் இலக்கம் 8,398. குறிச்சி—முள்ளியன்.** | | | | | |
| 1 | கண்ணகைஅம்மன் தோட்டம் அல்லது ஊரிகாடு | சின்னத்தம்பி செல்லையா | முடிக்குரிய நிலம் .. | காடு .. | 3 | 0 | 10 | 40 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக் காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கரச்சி. | | | | | |
| | | | பிளான் இலக்கம் நீர்பாச்சல் படம் 5. குறிச்சி—முரசுமோட்டை. | | | | | |
| 104 | முரசுமோட்டைகாடு.. | — .. | சரவணமுத்து சுப்புறுமணியம் காரை நகர் | செய்கைபண்ணிய நிலம் | 4 | 2 | 23 | 25‡ |
| 105 | ஷை .. | — .. | ஷை .. | ஷை .. | 5 | 0 | 1 | 25‡ |
| 39 | ஷை .. | — .. | எஸ். சுப்புறுமணியம், பிறக்றர், தெல்லிப்பளை | ஷை .. | 43 | 2 | 17 | 25‡ |
| 64P | ஷை .. | — .. | வல்லுவெட்டித்துறை ஆர். சுந்தரப் பத்தர் | ஷை .. | 17 | 1 | 22 | 25‡ |
| | | | பிளான் இலக்கம் நீர்பாச்சல் படம் 6. குறிச்சி—இரணமடு. | | | | | |
| 2 | இரணமடுகாடு அல்லது பறவிபாஞ்சான்காடு | — .. | எம். சின்னன், சே. சின்னையா, எஸ். கொண்டலிங்கம், என். நல்லபோயன், கிளிநொச்சி | செய்கைபண்ணிய நிலம். | 9 | 3 | 32 | 25‡ |
| 7H | ஷை .. | — .. | எம். வெள்ளைச்சாமி, கிளிநொச்சி | ஷை .. | 11 | 3 | 30 | 25‡ |
| | | | பிளான் இலக்கம் 8,395. குறிச்சி—வல்வெட்டி. | | | | | |
| 1 | கம்பன்சட்டி .. | — .. | பொலிகண்டி சின்னத்தம்பி வல்லிபுரம | தென்னை, நுணு, உள்ள காணி | 0 | 0 | 14·6 | 2,400‡ |
| 2 | ஷை .. | — .. | இளையதம்பி கைம்பெண் அன்னப்பிள்ளை | இருபது வயது தென்னைமரம் உள்ள காணி | 0 | 0 | 1·6 | 2,400‡ |
| 3 | ஷை .. | — .. | கதிரவேற்பிள்ளை சிங்காரவேலு | 6 தென்னை, மா, புளி, நெல்லி, கமுகு, கட்டுக்கிணறு, முதலியன உள்ள காணி | 0 | 0 | 7·6 | 2,400‡ |
| | | | பிளான் இலக்கம் 7,776. குறிச்சி—நாகர் கோயில். | | | | | |
| 3 | நாவலடி .. | கே. செல்லத்தம்பி | — .. | சிறு காடு .. | 1 | 0 | 3 | 20 |
| | | | பிளான் இலக்கம் 6,788. குறிச்சி—கரணவாய் தெற்கு. | | | | | |
| 1 | களலயக்கண்டி .. | — .. | சின்னக்குட்டி பெண் அருமை .. | வெளிநிலம் .. | 1 | 2 | 30 | 50 |
| 2 | காரைத்திடல் .. | — .. | கந்தவனம் ஏகாம்பரமும் அம்பலவர் சின்னருங் கூட்டிப்பிடித்த நிலம் | ஷை .. | 2 | 2 | 23 | 25 |

* முன் வேண்டியவர்கள் சொள்விலை பணத்தைக் கட்டவில்லை.

† பிரசித்த தேள்வைக்காகச் சேமிக்கப்படும்.

‡ திருத்தியவர்களுக்குத் தீர்ந்து கொடுக்கப்படும்.

இக்காணிகளைப்பற்றிய மறு விபரங்களை வடமாகாண ஏஜன்றரிடமும் படங்களை அளவைக் காரியதரிசியிடமுமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு ஆனிமீ 19 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்.
காணிக் கொம்மிஷனர்.

---

## விற்பனவுத் தின மாற்றம்.

### கணுக்கேணிக் குளத்து மேற்பரப்பிலுள்ள காணிக்குத்தகை விற்பனவு.

1933 ம் ஆண்டு வைகாசிமீ 19 ந் திகதியைக்கொண்ட 7,982 ம் இலக்க இலங்கை அரசாட்சி "கெசெற" பத்திரிகையில் 1933 ம் ஆண்டு ஆனிமீ 6 ந் திகதி விற்பனவுக்குப் பிரசுரஞ்செய்யப்பட்ட மேற்சொல்லிய காணிக்குத்தகை விற்பனவு குறித்த திகதி ஓர் பிரத்தியேக விடுதலை நாளாக இப்போ நியமிக்கப்பட்டிருக்கிறபடியால், 1933 ம் ஆண்டு ஆவணிமீ 18 ந் திகதி வெள்ளிக்கிழமை காலயே 11 மணிக்கு முல்லைத்தீவு வாசிக சாலையில் விற்பனவுக்குத் தவணையிடப்பட்டிருக்குதென்பதை இத்தால் அறிந்துகொள்ளவேண்டியது.

காணிக் கமிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஆண்டு ஆனிமீ 17 ந் தேதி.

சி. வி. பிறேயின்,
காணிக் கமிஷனர்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வீகொட சீலெநெய்யும் பள்ளிக்கூடம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 69. குறிச்சி—வீகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோங்ககவத்த .. | தென்னங்காணி, 12 தென்னையும், 2 எலுமிச்சையும், 4 பப்பாமரமும், 2 மாதாளையும், 2 யம்பொல மரமும், 1 கமுகுவும், 1 நாரத்தையும், 1 புளியும், ஒரு ஓட்டால் வேய்ந்த சீலெநெய்யும் மண் பாட்சாலையும், ஒரு ஓலையால் வேய்ந்த மண் கொட்டிலும், கம்பி வேலியும் உள்ளது | டி. ஜே. செனநாயக்க .. | 0 | 1 | 0·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ (ஓகஸ்ற்) ஆவணி மாசம் 16ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடங்தைகளினது தன்மையையும் அவ்வுடங்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஹூ (ஜூன்) ஆனிமீ 16 ந் வ.

ஆர். எஸ். வீ. பூலியர்,
உதவி அரசாட்சி ஏசன்று.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பத்தலகெதற பெண்பாடசாலைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 73. குறிச்சி—தல்கஸ்மோட்டை.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. —. |
|---|---|---|---|---|
| 1 | பண்டாரவத்த .. | தென்னங்காணி; 31 தென்னையும், 1 காட்டு அப்பிள் மரமும், 5 நிலையற்ற குளியும், 2 நிலையற்ற கிணறும், 1 ஓடுகால் வேய்ந்த கற்கூசும், 1 ஓடுகால் வேய்ந்த பெண் பாடசாலையும்; ஒரு ஓடுகால் வேய்ந்த மண்வீடுமுள்ளது | கே. மாட்டின் பெதிரு, தல்கஸ்மோட்டை | 0 2 22·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ (ஓகஸ்ற்) ஆவணி மாசம் 16 ந் தேதியிலன்று காலை 10·30 மணிக்கு இந்தக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடங்தைகளினது தன்மையையும் அவ்வுடங்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஹூ (ஜூன்) ஆனிமீ 16 ந் வ.

ஆர். எஸ். வீ. பூலியர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அம்பலாங்கொடை—எல்பிற்றியா றோட்டின் 3 ம் கட்டைக்குக் கிட்டவிருக்கும் மக்கிக்கடங்குக்குப் போகும் பாதை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 40. குறிச்சி—கறன்டெனியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மறககாவத்தை | 35 வயதுள்ள 1 தென்னமரம், 1 பலாமரம் (12 வயது) | இலன்டாரிடேவ பபூசா குருப்பு, கறன்டெனியா | 0 0 15·1 |
| 2 | ஷை .. | வெண்பூமி .. | இலன்டாரிடேவ சிங்கோ, இருப்பு கறன்டெனியா | 0 0 8·4 |
| 3 | ஷை. .. | வண்டிற்பாதையைப் பகுதியாகக் கொண்ட வெண்பூமி | (1) டீ. எச். யோஸ்லீன், (2) ஐ. டி. ஐதிறிஸ், (3) ஐ. டி. குறினேறிஸ், இருப்பு கறன்டெனியா | 0 0 9·3 |
| 4 | ஷை .. | 40 வயதுள்ள ஒரு தென்னமரம் கொண்ட ஒரு தோட்டம் | இலன்டாரிடேவா ஐசாறிஸ், இருப்பு கறன்டெனியா | 0 0 0·9 |
| 5 | மறககாவத்தை ஓவிட்ட | 25 வயதுள்ள இரண்டு கமுகுகளும், ஒருவண்டிற்பாதையின் பகுதியையும் கொண்ட தோட்டம் | களுவககுருஒயிசி, இருப்பு கறன்டெனியா | 0 0 3·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ ஆடி மாசம் 24 ந் தேதியிலன்று 2 மணிக்கு பிற்பகல் அம்பலாங்கொடை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடங்தைகளினது தன்மையையும் அவ்வுடங்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1933 ம் ஹூ ஆனிமீ 16 ந் வ.

பீ. ஜே ஹூட்சன்,
உவித அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டெல்வே அரசாட்சியார் சவென் பாடசாலையின் விளையாட்டு ஸ்தல விசாலித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல A 73. குறிச்சி—டெல்வே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | களுகலசேவத்தை | 3 தென்னைமரங்கள், 20 வருஷம் வயதுள்ள ஒரு பலாமரம், 2 வாழைக் கூடல்களும் 50 கறுவாமரக் கூடல்களும் ஒரு மலம் கழிக்கும் இடமும் அடங்கிய ஒரு தோட்டம் | (1) ம. சான்காமி, (2) அலபாற்பெற எமானியல், (3) கஹுகல மார்தீன் அல்விஸ், (4) எட்கமாகே கறோளிஸ் சில்வா, (5) கஹுகல சார்லிஸ் அல்விஸ், (6) ரட்கமகே புஞலிஸ் சில்வா, (7) விசெமுனி தெவிஸ் சில்வா, (8) திறிமதுற சிறிநேறிஸ் மென்டிஸ், (9) கஹுகல நன்டோறிஸ் சில்வா, (10) விக்றம றெயிறின் சொயிசா, (11) அலபாறடுற நம்பியேல், (12) கஹுகல பாவியஸ் சில்வா, (13) கஹுகல அப்புசிங்கோ, (14) பொன்னகண்டி சயனேறிஸ், இருப்பு டெல்வே | 0 0 13·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஆண்டு ஆடி மாசம் 24 ந் தேதியிலன்று 1·30 மணிக்கு பிற்பகல் அம்பலாங்கொடை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1933 ம் ஆண்டு ஆனிமீ 16 ந் உ.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

—=—

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென்மாகாணம், மாத்துறை டிஸ்திறிக் வெல்லபடபத்துவில் டிக்வெல்லையில் பொலிஸ்டேசனில் மோட்டர்சார் விடும் வீட்டிற்க்காக (கறேச்) என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதம்பட்டத்து இல A 61. குறிச்சி—டிக்வெல்லை தெற்கு

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விஸ்தீரணம்: ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கல்ப்புவ அத்தறவத்தை .. | ஓடால் வேய்ந்த கறேச்சில் ஒரு பகுதியுள்ள வெறுங் காணி | நாஒற்றுண்ணகே டொன் அந்திரியாஸ் டி. சில்வா, டிக்வெல்லை விதானை ஆராச்சி | 0 [illegible] 2·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஆண்டு ஜூலை மாசம் 29 ந் தேதியிலன்று மத்தியானம் 12·15 மணிக்கு டிக்வெல்லை பொலிஸ் டேசனில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

மாத்துறை கச்சேரி,
1933 ம் ஆண்டு ஜூன்மீ 20 ந் உ.

எஸ். எச். வாடியா.
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சேர்ந்தபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு நியாயஸ்தலத்திலே மேற்சொல்ய சுப்பிறீங் கோட்டாரால் யாழ்ப்பாணம், மன்னார் முல்லைத்தீவு டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1933 ம் ஆண்டு ஆடி மாதம் 24 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ் விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

பிஸ்கால் கந்தோர், யாழ்ப்பாணம்.
1933 ம் ஆண்டு ஆனிமீ 21 ந் உ.

எஸ். துரையப்பா.
வடமாகாண பிஸ்காலுக்காக.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.